U care centre

# PROGRESSIVE WAGE MODEL

## Model Gaji Progresif Bagi Industri Landskap

## நிலவனப்புத் துறைக்கான படிப்படியான சம்பள உயர்வு முறை




## Empat Tangga

# Model Gaji Progresif

## படிப்படியான சம்பள உயர்வு முறையின் நான்கு ஏணிகள்

Model Gaji Progresif (PWM) menyediakan laluan kemajuan kerjaya yang jelas, membolehkan para pekerja kita meraih **Gaji Lebih Baik** dengan **Prospek Pekerjaan yang Lebih Baik** sedang mereka menjadi **Lebih Berkemahiran** dan **Lebih Produktif**.

PWM ini dikenakan kepada semua pekerja pemastautin, iaitu **Warganegara Singapura dan Penduduk Tetap** dalam sektor ini. Pekerja sambilan hendaklah dibayar mengikut gaji PWM pro-rata.









படிப்படியான சம்பள உயர்வு முறை (PWM), தெளிவான முன்னேற்றப் பாதையை வகுத்துத் தருகிறது. நமது ஊழியர்கள் **மேம்பட்ட திறன் பெற்று**, **உற்பத்தித்திறனை வளர்த்துக் கொள்ளும்போது**, **மேம்பட்ட வேலை வாய்ப்புகளோடு மேம்பட்ட சம்பளம் பெற** இப்பாதை துணை புரிகிறது.

சிங்கப்பூர்வாழ் ஊழியர்கள், அதாவது இந்தத் துறையில் பணிபுரியும் **சிங்கப்பூரர்கள் / நிரந்தரவாசிகள்** அனைவருக்கும் PWM பொருந்தும். பகுதிநேர ஊழியர்களுக்கு விகிதப்படியான PWM சம்பளம் கிடைக்கும்.

*Nota:* *Bagi firma yang menggajikan pekerja asing, majikan digalak mengamalkan prinsip utama gaji progresif dalam struktur gaji mereka.*

குறிப்பு: *வெளிநாட்டு ஊழியர்களை வேலைக்குச் சேர்க்கும் நிறுவனங்கள், படிப்படியான சம்பள உயர்வு முறையின் முக்கிய கொள்கைகளைத் தங்களது சம்பள முறையில் உள்ளடக்க ஊக்குவிக்கப்படுகின்றன.*





Untuk maklumat lanjut mengenai PWM, sila hubungi Pusat NTUC U Care:
PWM பற்றி மேல்விவரம் அறிய, என்டியுசி யு கேர் நிலையத்துடன் தொடர்பு கொள்ளுங்கள்:

**NTUC U Care Centre**
1800-CALL-PWM (1800-2255-796) (Mon – Fri: 9am – 6pm)
ucarecentre@ntuc.org.sg
https://www.ntuc.org.sg/ucarecentre /ucarecentre

An ntuc Initiative

© 2024 NTUC All Rights Reserved
All information in this publication is accurate as of July 2024

Pada April 2014, Kluster Triparti bagi Industri Landskap (TCL) yang diwakili oleh persatuan-persatuan industri, majikan, pembeli perkhidmatan, kesatuan sekerja dan agensi Pemerintah telah ditubuhkan untuk melakarkan Model Gaji Progresif bagi subsektor penyelenggaraan landskap. Pada Jun 2016, Model Gaji Progresif bagi Industri Landskap menjadi syarat wajib bagi syarikat yang berdaftar di bawah Daftar Syarikat Landskap yang ditadbir oleh Lembaga Taman Negara. Semua syarikat yang berdaftar dikehendaki mematuhi keperluan Model Gaji Progresif untuk pekerja penyelenggaraan landskap pemastautinnya.

Pada Oktober 2020, Kumpulan Kerja Tiga Pihak bagi Pekerja Bergaji Rendah (TWG-LWW) telah dibentuk untuk meninjau cara-cara untuk meningkatkan lagi gaji dan kesejahteraan para pekerja bergaji rendah (LWWs). Ini memastikan pertumbuhan gaji pekerja bergaji rendah terus mengatasi pertumbuhan gaji median. Kumpulan Kerja Tiga Pihak bagi Pekerja Bergaji Rendah (TWG-LWW) juga menyarankan untuk melanjutkan Model Gaji Progresif bagi Industri Landskap yang sedia ada kepada pekerja penyelenggaraan landskap dalaman mulai 1 September 2022.

Triparti bagi Industri Landskap telah mengeluarkan saranan pada 20 Ogos 2021 dengan jadual gaji enam tahun dari 2022 hingga 2028 yang telah diterima oleh Pemerintah.





படிப்படியான சம்பள உயர்வு முறையைத் (PWM) தயாரிப்பதற்காக, 2014 ஏப்ரல் மாதம், நிலவனப்புத் துறைக்கான முத்தரப்புக் குழுமம் (TCL) அமைக்கப்பட்டது. இந்தக் குழுமத்தில் தொழில்துறை சங்கங்கள், முதலாளிகள், சேவை வாங்குநர்கள், தொழிற்சங்கங்கள், அரசாங்க அமைப்புகள் ஆகியவை பிரதிநிதிக்கப்படுகின்றன. தேசிய பூங்காக் கழகம் நிர்வகிக்கும் நிலவனப்பு நிறுவனப் பதிவகத்தில் பதிவு செய்திருக்கும் நிறுவனங்களுக்கு, 2016 ஜூன் மாதத்திலிருந்து, நிலவனப்புத் துறைக்கான படிப்படியான சம்பள உயர்வு முறை கட்டாயமாக்கப்பட்டது. பதிவகத்தில் பதிவு செய்துள்ள அனைத்து நிறுவனங்களும், தங்களது நிலவனப்புப் பராமரிப்பு ஊழியர்களுக்கு படிப்படியான சம்பள உயர்வு முறையைக் கடைப்பிடிப்பது கட்டாயம்.

குறைந்த வருமான ஊழியர்களின் சம்பளத்தையும் நலனையும் மேலும் மேம்படுத்துவதற்கான வழிமுறைகளை ஆராய, 2020 அக்டோபர் மாதம், குறைந்த வருமான ஊழியர்களுக்கான முத்தரப்புப் பணிக்குழு (TWG-LWW) அமைக்கப்பட்டது. குறைந்த வருமான ஊழியர்களின் சம்பளம், தொடர்ந்து இடைநிலை சம்பள வளர்ச்சியைவிட வேகமாக வளர்ச்சி அடைவதை இது உறுதி செய்கிறது. நிலவனப்புத் துறையில் தற்போது நடப்பிலுள்ள படிப்படியான சம்பள உயர்வு முறையை 1 செப்டம்பர் 2022 முதல் சொந்த நிலவனப்புப் பராமரிப்பு ஊழியர்களுக்கும் வழங்குமாறு TWG-LWW பரிந்துரைத்தது.

TCL குழுமம், 2022 முதல் 2028 வரையிலான ஆறு ஆண்டுகாலச் சம்பளத் திட்டத்துடன், 20 ஆகஸ்ட் 2021 அன்று தனது பரிந்துரைகளை வெளியிட்டது. அவற்றை அரசாங்கம் ஏற்றுக்கொண்டது

Untuk membaca laporan penuh Kluster Triparti bagi Industri Landskap (TCL), sila imbas Kod QR atau lungsuri *www.ntuc.org.sg/pwm*

முழுமையான TCL அறிக்கையைப் படிக்க, விரைவுத் தகவல் குறியீட்டை ஒளிவருடல் செய்யுங்கள் அல்லது *www.ntuc.org.sg/pwm* இணையத்தளத்தை நாடுங்கள்


# Tangga Kerjaya PWM
## PWM வாழ்க்கைத் தொழில் ஏணி

Tangga Kerjaya PWM menyediakan laluan kemajuan kerjaya yang jelas bagi membolehkan para pekerja penyelenggaraan landskap maju dalam kerjaya mereka.

Pada Januari 2021, Pemerintah telah menerima saranan Triparti bagi Industri Landskap untuk memperkenalkan Trek Pakar di bawah Tangga Kerjaya PWM sebagai sebahagian daripada usaha berterusan untuk memprofesionalkan sektor ini dan untuk menarik pekerja baru dan yang lebih muda ke dalam industri ini.

நிலவனப்புப் பராமரிப்பு ஊழியர்கள் தங்களது வாழ்க்கைத்தொழிலில் முன்னேற்றமடைய, PWM வாழ்க்கைத்தொழில் ஏணி, தெளிவான முன்னேற்றப் பாதையை வகுத்துத் தருகிறது.

இந்தத் துறையை நிபுணத்துவமாக்கும் முயற்சிகளின் ஒரு பகுதியாகவும், புதிய, இளைய ஊழியர்களை ஈர்க்கவும், PWM வாழ்க்கைத்தொழில் ஏணியின்கீழ் நிபுணத்துவப் பிரிவை அறிமுகப்படுத்துமாறு TCL குழுமம் செய்த பரிந்துரைகளை அரசாங்கம் ஏற்றுக்கொண்டது.




** Pelajar yang lulus dengan kelayakan dari Institut Pengajian Tinggi (IHL) boleh ditempatkan di Trek Pakar apabila mereka diambil bekerja dengan syarikat landskap, dengan syarat mereka telah dinilai setelah memenuhi syarat-syarat pekerjaan lain (contohnya,sesuai sihat dari segi perubatan dan fizikal atau disifatkan oleh majikan sebagai telah mendapat pengalaman asas yang mencukupi dan menunjukkan kepakaran teknikal).*

** தேவையான உயர்கல்வித் தேர்ச்சி பெற்றவர்கள், நிலவனப்பு நிறுவனங்களால் வேலைக்குச் சேர்த்துக் கொள்ளப்படும்போது, மற்ற வேலை நியமன நிபந்தனைகளையும் நிறைவேற்றியிருந்தால், (எ.கா. மருத்துவ ரீதியாக உடலுறுதியுடன் இருப்பதாக அல்லது போதுமான அனுபவத்துடன் தொழில்நுட்பத் திறன் பெற்றிருப்பதாக முதலாளிகள் கருதினால்), நிபுணத்துவப் பிரிவில் சேர்க்கப்படலாம்.*

# Tangga Kemahiran PWM
## PWM திறன்கள் ஏணி

Tangga Kemahiran PWM memastikan bahawa pekerja penyelenggaraan landskap akan mempunyai kemahiran dan kecekapan yang diperlukan untuk menjalankan tugas mereka dengan cekap dan selamat.

Berkuat kuasa 1 Julai 2023, semua pekerja penyelenggaraan landskap perlu dilatih dalam tiga modul Kelayakan Kemahiran Tenaga Kerja (WSQ) mandatori bagi memenuhi keperluan latihan di peringkat pekerjaan PWM.

Jadual di halaman sebelah menunjukkan kelayakan setiap Institut Pengajian Tinggi bagi mereka yang berminat mengambil trek pakar.

நிலவனப்புப் பராமரிப்பு ஊழியர்கள் தங்களது வேலையைத் திறம்படவும் பாதுகாப்பாகவும் செய்வதற்குத் தேவையான திறன்களைப் பெற்றிருப்பதை PWM திறன் ஏணி உறுதி செய்கிறது.

1 ஜூலை 2023 முதல், நிலவனப்புப் பராமரிப்பு ஊழியர்கள் அனைவரும், PWM வேலை நிலையின் பயிற்சித் தேவைகளை நிறைவேற்ற, மூன்று கட்டாய ஊழியர் அணி திறன் தேர்ச்சி (WSQ) பாடத்தொகுதிகளில் பயிற்சி பெற்றிருக்கவேண்டும்

நிபுணத்துவப் பிரிவில் சேர விரும்புவோருக்கான உயர்கல்வித் தேர்ச்சிகளை அடுத்த பக்கத்தில் உள்ள அட்டவணை காட்டுகிறது.

| Peranan Pekerjaan PWM<br>PWM வேலைப் பொறுப்புகள் | Keperluan Latihan PWM<br>PWM பயிற்சி நிபந்தனைகள் |
|---|---|
| **Penyelia Landskap**<br>நிலவனப்பு மேற்பார்வையாளர் | **3 modul WSQ** (secara kumulatif 12 modul)<br>3 WSQ பாடத்தொகுதிகள்<br>(மொத்தமாக 12 பாடத்தொகுதிகள்) |
| **Penolong Penyelia Landskap**<br>நிலவனப்பு உதவி மேற்பார்வையாளர் | **3 modul WSQ** (secara kumulatif 9 modul)<br>3 WSQ பாடத்தொகுதிகள்<br>(மொத்தமாக 9 பாடத்தொகுதிகள்) |
| **Teknisyen Landskap**<br>நிலவனப்பு தொழில்நுட்பர் | **3 modul WSQ** (secara kumulatif 6 modul)<br>3 WSQ பாடத்தொகுதிகள்<br>(மொத்தமாக 6 பாடத்தொகுதிகள்) |
| **Pekerja Landskap**<br>நிலவனப்பு ஊழியர் | **3 modul WSQ**<br>3 WSQ பாடத்தொகுதிகள் |

| Trek Pakar<br>நிபுணத்துவப் பிரிவு | Kelayakan Institut Pengajian Tinggi untuk Pekerja Baru<br>புதிதாக வேலையில் சேர்வோருக்கான உயர்கல்விக் கழகத் தேர்ச்சிகள் |
|---|---|
| **Pakar Landskap Kanan**<br>மூத்த நிலவனப்பு நிபுணர் | Politeknik Ngee Ann: Diploma Reka Bentuk Landskap & Hortikultur<br>நீ ஆன் பலதுறைத் தொழிற்கல்லூரி:நிலவனப்பு வடிவமைப்பு & தோட்டக்கலை பட்டயம்<br>Institut Pendidikan Teknikal (ITE): Diploma Kerja sambil belajar dalam Arborikultur & Hortikultur<br>தொழில்நுட்பக் கல்விக் கழகம் (ஐடிஇ): மரம் வளர்ப்பு & தோட்டக்கலையில் வேலை-கல்வி பட்டயம் |
| **Pakar Landskap**<br>நிலவனப்பு நிபுணர் | ITE: *Nitec* (Sijil ITE Nasional) dalam Kehijauan dan Landskap Bandar<br>ஐடிஇ: நகர்ப்புறப் பசுமை & நிலவனப்புத் துறையில் நைட்டெக் சான்றிதழ்<br>ITE: *Nitec Lanjutan* (Sijil ITE Nasional Lanjutan) dalam Pengurusan dan Reka Bentuk Landskap<br>ஐடிஇ: நிலவனப்பு மேலாண்மை & வடிவமைப்பில் உயர் நைட்டெக் சான்றிதழ் |

# Tangga Gaji PWM
## PWM சம்பள ஏணி

Tangga Gaji PWM menetapkan gaji garis dasar dan kenaikan tahunan yang mampan yang disandarkan kepada peranan pekerjaan masing-masing.

PWM சம்பள ஏணி, வேலைப் பொறுப்புகளுக்கு ஏற்ப அடிப்படைச் சம்பளங்களையும் நிலையான சம்பள உயர்வுகளையும் நிர்ணயிக்கிறது.

### Peranan Pekerjaan PWM PWM வேலைப் பொறுப்புகள்

| | 2023 | 2024 | 2025 | 2026 | 2027 | 2028 |
|---|---|---|---|---|---|---|
| **Pakar Landskap Kanan / Penyelia Landskap** மூத்த நிலவனப்பு நிபுணர் / நிலவனப்பு மேற்பார்வையாளர் | $2,600 | $2,750 | $2,900 | $3,060 | $3,220 | $3,380 |
| **Pakar Landskap / Penolong Penyelia Landskap** நிலவனப்பு நிபுணர் / நிலவனப்பு உதவி மேற்பார்வையாளர் | $2,215 | $2,380 | $2,545 | $2,685 | $2,825 | $2,965 |
| **Teknisyen Landskap** நிலவனப்பு தொழில்நுட்பர் | $2,010 | $2,170 | $2,330 | $2,490 | $2,650 | $2,810 |
| **Pekerja Landskap** நிலவனப்பு ஊழியர் | $1,750 | $1,850 | $1,950 | $2,095 | $2,240 | $2,385 |

*Nota: Gaji Asas PWM merujuk kepada Gaji Asas Bulanan*

*குறிப்பு: PWM அடிப்படைச் சம்பளம் என்பது மாதாந்தர அடிப்படைச் சம்பளத்தைக் குறிக்கிறது*

# Pelaksanaan Bonus PWM
## PWM போனஸ் அமலாக்கம்

Untuk menarik dan mengekalkan pekerja, Kluster Triparti bagi Industri Landskap menyarankan Bonus PWM mandatori untuk pekerja penyelenggaraan landskap yang layak mulai 1 Januari 2020. Ini adalah untuk memberi insentif kepada syarikat untuk melabur lebih banyak dalam latihan pekerja yang kekal, untuk meningkatkan lagi produktiviti mereka.

Kuantum Bonus PWM setiap tahun hendaklah sekurang-kurangnya 2 minggu daripada gaji asas bulanan pekerja dan ia tidak terikat kepada prestasi pekerja.

Bonus PWM mesti dibuat sekurang-kurangnya setahun sekali, tetapi tidak melebihi dua kali setahun. Bonus berkenaan mesti disenaraikan dalam slip gaji dan tertakluk kepada sumbangan CPF oleh kedua-dua majikan dan pekerja.

Para majikan diberikan kelonggaran untuk menentukan bulan mana dalam tahun itu yang akan menjadi tarikh penentuan pengiraan Bonus PWM. Namun, mereka mesti membuat pembayaran Bonus PWM dalam masa sebulan dari tarikh penentuan tersebut, atau pada hari terakhir pekerja bekerja, mengikut mana yang lebih awal.

Majikan dinasihatkan untuk berkomunikasi dengan jelas kepada pekerja-pekerja mereka melalui pekeliling kakitangan mengenai kelayakan Bonus PWM dan dasar mereka mengenai jadual pembayaran.

ஊழியர்களை ஈர்க்கவும், தக்கவைக்கவும், தகுதிபெறும் நிலவனப்புப் பராமரிப்பு ஊழியர்களுக்கு 1 ஜனவரி 2020 முதல் கட்டாய PWM போனஸ் தரவேண்டும் என்று TCL பரிந்துரைத்தது. வேலையில் நீடித்திருக்கும் ஊழியர்களுக்குப் பயிற்சி அளிக்க நிறுவனங்கள் கூடுதலாக முதலீடு செய்ய இது ஊக்கமளிக்கும். இதன்வழி ஊழியர்களின் உற்பத்தித்திறனும் உயரும்.

PWM போனஸ் தொகை, ஊழியரின் ஒரு மாத அடிப்படைச் சம்பளத்தில் 2 வாரச் சம்பளத்திற்குக் குறைவாக இருக்கக்கூடாது. அதோடு, ஊழியரின் செயல்திறனுடன் தொடர்புபடுத்தப்படக்கூடாது.

PWM போனஸ் ஓர் ஆண்டில் குறைந்தது ஒருமுறை தரப்படவேண்டும். ஆனால், ஓர் ஆண்டில் இரண்டு முறைக்குமேல் தரப்படக்கூடாது. இந்த போனஸ், சம்பளச் சீட்டில் குறிப்பிடப்படவேண்டும். முதலாளி, ஊழியர் இருவருமே இதற்கு மத்திய சேம நிதி சந்தா செலுத்தவேண்டும்.

PWM போனஸ் கணக்கீட்டுக்கான காலகட்டம் ஆண்டின் எந்த மாதத்தில் முடிவடையவேண்டும் என்பதை நிர்ணயிக்க முதலாளிகளுக்கு நீக்குப்போக்கு தரப்படுகிறது. ஆனால், காலகட்டம் முடிவடையும் தேதியிலிருந்து ஒரு மாதத்திற்குள், அல்லது ஊழியரின் கடைசி வேலை நாளன்று PWM போனஸ் தரப்படவேண்டும்.

PWM போனஸ் தகுதிநிலை, வழங்கீட்டுக் காலகட்டம் குறித்த கொள்கை பற்றி சுற்றறிக்கை மூலம் ஊழியர்களிடம் தெளிவாகத் தெரியப்படுத்துமாறு முதலாளிகளுக்கு ஆலோசனை கூறப்படுகிறது.

Untuk maklumat lanjut mengenai pelaksanaan Bonus PWM, sila rujuk laporan penuh Kluster Triparti bagi Industri Landskap (TCL) dengan mengimbas kod QR atau lungsuri [www.ntuc.org.sg/pwm](http://www.ntuc.org.sg/pwm)

PWM உபரிச் சம்பளம் அமலாக்கம் பற்றிய மேல் விவரங்களுக்கு, தயவுசெய்து [www.ntuc.org.sg/pwm](http://www.ntuc.org.sg/pwm) என்ற முழு அறிக்கையைப் பார்க்கவும்

# Siapa yang layak?
## யார் தகுதி பெறுவார்கள்?

Pekerja pemastautin (Warganegara Singapura dan Penduduk Tetap) yang bekerja sepenuh dan separuh masa dengan majikan yang sama untuk sekurang-kurangnya 12 bulan semasa pengiraan Bonus PWM. Tempoh pekerjaan selama 12 bulan termasuk cuti bergaji dan cuti berkanun.

PWM போனஸ் கணக்கிடப்படும் சமயத்தில் குறைந்தது 12 மாதங்களாக அதே முதலாளியிடம் வேலை செய்யும் முழுநேர, பகுதிநேர சிங்கப்பூர்வாழ் (சிங்கப்பூரர்/ நிரந்தரவாசி) ஊழியர்கள். வேலை செய்த 12 மாதக் காலகட்டத்தில் சம்பளம் தரப்படும் விடுப்பும் சட்டபூர்வ விடுப்பும் உள்ளடங்கும்.

| Senario<br>சூழ்நிலைகள் | Bonus PWM dibayar?<br>PWM போனஸ் தரப்படுமா? |
|---|---|
| (a) Pekerja Sambilan / Pekerja Kasual<br>பகுதிநேர ஊழியர் / நாட்கூலி ஊழியர் | Ya (pro-rata)<br>ஆமாம் (கால விகிதப்படி) |
| (b) Bersara / Penamatan Perkhidmatan Pekerja Kerana Kesihatan<br>பணி ஓய்வு பெறுபவர் / மருத்துவக் காரணங்களால் வெளியேறுபவர் | Ya (pro-rata)<br>ஆமாம் (கால விகிதப்படி) |
| (c) Pekerja letak jawatan atas kehendak sendiri<br>ஊழியர் தன் சொந்த விருப்பத்தின்பேரில் வேலையிலிருந்து விலகிக் கொள்கிறார் | Tidak<br>இல்லை |
| (d) Pekerja ditamatkan perkhidmatan kerana salah laku<br>ஊழியர் தவறான நடத்தையின் காரணமாக வேலையிலிருந்து நீக்கப்படுகிறார் | Tidak<br>இல்லை |

Bagi pekerja sambilan, tempoh perkhidmatan (tempoh pekerjaan) akan dikira dari hari pertama mereka bekerja.

பகுதிநேர ஊழியருக்கு, வேலை செய்யத் தொடங்கிய முதல் நாளிலிருந்து சேவைக் காலம் (வேலை செய்த காலகட்டம்) கணக்கிடப்படும்.

| Apa yang dianggap sebagai Bonus PWM?<br>எது PWM போனஸாகக் கருதப்படும் | Apakah yang TIDAK dianggap sebagai Bonus PWM?<br>எது PWM போனஸாகக் கருதப்படாது |
|---|---|
| • Bonus prestasi<br>செயல்திறன் போனஸ் | • Sebarang gaji asas<br>ஏதாவது அடிப்படைச் சம்பளம் |
| • Bonus pengekalan<br>தக்கவைப்பு போனஸ் | • Sebarang bayaran kerja lebih masa<br>ஏதாவது மிகைநேரச் சம்பளம் |
| • Gaji tambahan tahunan (biasanya dikenali sebagai bonus "bulan ke-13")<br>வருடாந்தர சம்பள நிரப்புத்தொகை ("13ஆம் மாத" போனஸ் எனப் பொதுவாக அறியப்படும்) | • Sebarang bayaran balik untuk perbelanjaan khas yang dilakukan oleh seorang pekerja semasa mereka bekerja<br>ஊழியரின் வேலையின்போது ஊழியருக்கு ஏற்படும் சிறப்புச் செலவுகளுக்காகத் திருப்பித் தரப்படும் தொகை |
| • Bonus perayaan<br>விழாக்கால போனஸ் | • Sebarang elaun atau insentif tetap walau bagaimanapun diterangkan<br>வேறுவிதமாகக் குறிப்பிடப்படும் ஏதாவது வழக்கமான செலவுத்தொகை அல்லது ஊக்கத்தொகை |
| • Sebarang kelas bonus yang boleh berubah suai yang mungkin dibayar oleh majikan kepada pekerjanya<br>முதலாளி தனது ஊழியர்களுக்குத் தரக்கூடிய ஏதாவதொரு வகையான மாறுவிகித போனஸ் | |